1981 ஜனவரி 30]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, 1969-ல் உச்சவரம்புச் சட்டம் வந்தபோது மேய்ச்சல் நிலங்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டது. 1971-ல்தான் மேய்ச்சல்நிலங்களுக்கு அளிக்கப்பட்ட விதிவிலக்கு ரத்து செய்யப்பட்டது. இப்போது கவனத்திற்குக்கொண்டு வந்து இருக்கிறீர்கள். அதற்குத்தீவிரமான நடவடிக்கை எடுக்க ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

குத்தகை உரிமை வழக்குகள்.

*வினா எண் 104—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) நிலம் சம்பந்தப்பட்ட குத்தகை உரிமை வழக்குகளை தாசில்தார்கள் விசாரிப்பதால் காலதாமதம் ஏற்பட்டு வழக்குகள் பெருமளவில் தேங்கிக் கிடப்பதை அரசு அறியுமா?

(ஆ)ஆம் எனில், விரைந்து முடிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு வேளாண்மை நிலங்கள் குத்தகை ஆவணப் பதிவு சட்டத்தின் கீழ் தமிழ்நாடு முழுவதும் தற்சமயம் 6,397 மனுக்கள் நிலுவையில் உள்ளன. மேற்கூறிய மனுக்களை மூன்று மாதங்களுக்குள் முடிக்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. எம். சின்னசாமி: தலைவர் அவர்களே, இந்த வழக்குகளை தாசில்தார்கள் தான் விசாரிக்க வேண்டியிருக்கிறது, அவர்களுக்குப் பல்வேறு வேலைகள் இருப்பதால், இந்த விசாரணைகள் காலதாமதம் ஆகின்றன. கடன் நிவாரணச் சட்டத்திற்காக தனியாக தாசில்தார் போட்டு இருப்பதுபோல், இந்தக் குத்தகை உரிமை வழங்கும் வழக்குகளையும் விசாரிக்கத் தனித் தாசில்தார் போட அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, குத்தகை நிலங்கள் அதிகமாக இருந்தபோது தனியாக தாசில்தார்கள் போடப்பட்டு, பைசல் செய்யப்பட்டன. இன்றைக்கு எல்லா இடங்களிலும் முடியும் தருவாயில் இருக்கிறது. இன்னும் ஏறத்தாழ 6,000 மனுக்கள்தான் மாநிலம் பூராவிலும் உள்ளன. சில தாசில்தார்களுக்கு 100, 200 மனுக்களும் சில தாசில்தார்களுக்கு 10 அல்லது 20 மனுக்களும்தான் பாக்கி இருக்கின்றன. அவைகளை விரைவிலே பைசல் செய்ய வேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறது.

திரு. எம். சின்னசாமி: தலைவரவர்களே, இந்த வழக்குகளை தாசில்தார்கள் விசாரிப்பதற்குப் பதிலாக, தாசில்தார்கள் தீர்ப்பு

வழங்கிய பிறகும் சம்பந்தப்பட்ட நபர்கள் சிவில் கோர்ட்டுக்கு போகிற காரணத்தால், சிவில் கோர்ட்டே விசாரிக்க அரசு சட்டப் கொண்டு வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே' வேலை முடியும் தருவாயில் இருப்பதால் புதிதாக ஒரு முறையைக் கொண்டுவரத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. பு. கோ. ஆனூர் ஜகதீசன் : தலைவரவர்களே, கிராம கர்ணமாக இருந்தவர்கள் நிலத்தை குத்தகைப் பயிர் செய்யும் விவசாயிகள் பெயரில் பதிவு செய்வதற்குப் பதிலாக நிலச் சொந்தக் காரர்கள் பெயரிலேயே உண்மைக்கு மாறாக பதிவேட்டில் பதிவு செய்திருக்கிறார்கள். ஆகையால் குத்தகைதாரர்கள் வழக்கில் நல்ல தீர்ப்பை எதிர்பார்க்க முடியவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? அப்படிப்பட்டவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்ளே, குத்தகை பதிவு ஏட்டில் குத்தகைதாரர்களுக்கு நியாயம் கிடைக்கும் வகையில் பதிவு செய்ய வேண்டும் என்றும் குத்தகைதாரர்களுக்கு நியாயம் வழங்க வேண்டுமென்றும் அரசு சொல்லியிருக்கிறது. பெரும்பாலும் நிலம் வைத்திருப்பவர்கள் குத்தகைக்கு விட்டுவிட்டு குத்தகைக்கு விடவில்லை என்று சொல்ல வாய்ப்பு இருக்கிறது. ஆனால் குத்தகை செய்கிறவர்கள், நான் குத்தகை செய்கிறேன் என்று சொல்வது மிகமிகக் குறைவு. ஆகவே, மனுதாரர்களுக்கு சாதகமாகத் தீர்ப்பு வழங்க வேண்டுமென்று உத்தரவிடப்பட்டி ருக்கிறது.

திரு. இரா. கருப்பையா : தலைவரவர்களே, மாநிலம் முழுவ திலும் 6,397 வழக்குகள்தான் இருப்பதாக அமைச்சரவர்கள்சொன் னார்கள். அதனால் மாநிலம் முழுவதுக்கும் தாசில்தார்கள் தனியாக நியமிக்கப்படாவிட்டாலும் அதிகமாக வழக்குகள் தேங்கி யுள்ள திருச்சி மாவட்டத்திற்கு தனி தாசில்தாரை நியமித்து, இந்த விசாரணையை விரைவிலே பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, இன்று மாநிலம் முழுவதுமாக 6397 வழக்குகள் இருப்பதாகச் சொன்னேன். எந்தெந்த மாவட்டத்தில் அதிகமாக இருக்கிறது எந்தெந்த வட்டத்தில் அதிகமாக இருக்கிறது என்பதற்கு கணக்கு இருக்கிறது. விரைவிலே வழக்குகள் முடியாத நிலை ஏற்பட்டால் அரசு அது பற்றி ஆராயும்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : தலைவரவர்களே. நிலத்தில் குத்தகைப் பயிர் செய்பவர்களை விசாரித்து தீர்ப்பு வழங்குவதற் காக நியமிக்கப்பட்ட தாசில்தார்கள் நிலப்பிரபுக்கள் பெயரிலேயே பதிவு செய்துவிடுகிறார்கள் என்ற குற்றச்சாட்டு இந்த அரசுக்கு

1981 ஜனவரி 30]

வந்திருக்கிறதா? அப்படிப்பட்ட அவல நிலையைப் போக்குவதற்கு பொது உறுப்பினர்கள் கொண்ட கமிட்டி ஒன்றை ஆங்காங்கே போட அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, அரசு யோசிக்கும்.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, இன்னும் 6,000 வழக்குகள் இருப்பதாகச் சொன்னார்கள், மாநிலம் பூராவிலும். அதோடுகூட புதிய சட்டங்கள் இயற்றப்பட்டு, அமுல்படுத்துகிற பொறுப்பும் தாசில்தார்களுக்கு இருக்கிறது. புதிய, புதிய பென்ஷன் ஸ்கிம்களை அமுல்படுத்தும் பொறுப்பும் தாசில்தார்களுக்கு இருக்கிறது. அதற்குமேல் அமைச்சர்கள் 'டூர்' செய்யும் போது அவர்களுக்கு 'வெயிட் ஆன் தி மினிஸ்டர்ஸ்' என்ற முறையில் 'அடிஷனல் ரெஸ்பான்சிபிலிட்டி' இருக்கிறது. ஆகவே, இந்த மாதிரியான பொறுப்புகளைக் குறைத்து, வழக்குகளை துரிதமாக பைசல் செய்ய நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, தாசில்தார்களுக்கு வேலை அதிகமாக இருந்தால், அதற்கு தகுந்தபடி துணை தாசில்தார்களையும் மற்றுமுள்ள அலுவலர்களையும் அரசு நியமிக்கிறது. அவர்கள் எங்களுக்கு வேலை அதிகமாக இருக்கிறது என்று சொல்லவில்லை. அவர்களால் எவ்வளவு செய்ய முடியும் என்று அரசு யோசிக்கிறது. அதுமட்டுமல்ல; இந்த 6000 மனுக்களும் ஒரே இடத்தில் இல்லை; 156 தாலுகாக்களில் இருக்கின்றன. சில தாலுகாக்களில் மிகக் குறைவாகத்தான் இருக்கின்றன. ஏதாவது குறிப்பிட்ட ஒன்றிரண்டு தாலுகாக்களில் அதிகமாக இருந்தால், அதுபற்றி அரசு யோசிக்கும்.

## தண்ணீர்த் தீர்வை விதிப்பு.

*வினா எண் 105—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்ணீர்த் தீர்வை விகிதங்களை சீரமைப்பது பற்றி வருவாய் வாரிய உறுப்பினரைக் கொண்ட ஒரு நபர் கமிட்டி சிபாரிசு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) ஆம்.

(ஆ) குழுவின் பரிந்துரைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

## பாலிடெக்னிக்குகளில் சிப்டு முறை.

*வினா எண் 106 —திரு. வேடசெந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—